பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

27 11 2024 **WEDNESDAY 6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த சில மணிநேரங்களில் புயலாக வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

2. "குழந்தை திருமணம் இல்லா இந்தியா" என்ற இயக்கத்தை மத்திய அரசு இன்று தொடங்கியுள்ளது.

3. தமிழகத்தில் பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தை செயல்படுத்த இயலாது என்று மாநில அரசு கூறியுள்ளது.

4. காவல்துறையினர் சுதந்திரமாக செயல்பட திமுக அரசு அனுமதிக்க வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

5. உலக பாரா **Taekwondo Poomsae** சாம்பியன் போட்டியில் இந்தியா மூன்று தங்கம், இரண்டு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

<<<<<<>>>>>

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த சில மணிநேரங்களில் புயலாக வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதன் காரணமாக, மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் கனமழையும், சில இடங்களில் மிக கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 63 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது.

டெல்டா மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் பெய்த கனமழையின் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

நாகை மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக, ஏராளமான பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் - 40 செகண்ட்ஸ்)*

மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள 14 மீனவ கிராமங்களில் கடல் சீற்றத்துடன் காணப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - மணிகண்டன் - 49 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

சமூக வலைதளங்களில் ஆபாச கருத்துக்கள் மற்றும் படங்கள் பகிரப்படுவதை தடுப்பதற்கான சட்டங்கள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், சமூக வலைதளங்களை முறைப்படுத்துவற்கான அம்சங்கள் இல்லாததன் காரணமாக ஆபாச கருத்துக்கள் பகிரப்படுவதாக கூறினார்.

இதுதொடர்பாக, சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற நிலைக்குழு உரிய ஆலோசனைகளை மேற்கொண்டு கடுமையான சட்டத்திருத்தங்களை கொண்டுவர பரிந்துரைக்க வேண்டும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

குழந்தை திருமணங்கள் கிரிமினல் குற்றம் மட்டுமின்றி, மனித உரிமை மீறல் என்றும் மத்திய மகளிர் நலன் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் "குழந்தை திருமணம் இல்லா இந்தியா" என்ற இயக்கத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இந்த இயக்கம் நாடு முழுவதும் 130 மாவட்டங்களில் நடைபெறவுள்ளதாக கூறினார்.

இலக்கை எட்டும்வரை இந்த இயக்கம் தொடர்ந்து நடைபெறும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், இதுதொடர்பான இணையதள சேவையையும் திருமதி அன்னபூர்ணா தேவி தொடங்கிவைத்தார்.

<<<<<<>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரெளபதி முர்மு, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று தமிழகம் வந்து சேர்ந்தார்.

தில்லியிலிருந்து கோவை வந்த அவருக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதன்பின்னர், குடியரசுத் தலைவர் சாலை மார்க்கமாக உதகை சென்றடைந்தார்.

உதகையில் நாளையும், நாளை மறுநாளும் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகளில் குடியரசுத் தலைவர் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - சரவணன் - 30 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

தமிழகத்தில் பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தை செயல்படுத்த இயலாது என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, மத்திய சிறு-குறு தொழில்துறை அமைச்சர் திரு ஜித்தன் ராம் மாஞ்சிக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த திட்டம் தொடர்பாக தமிழக அரசு சார்பில், சில திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டதையும் அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும் இதுதொடர்பாக மத்திய அரசிடமிருந்து பதில் கிடைக்கவில்லை என்றும், தற்போதைய வடிவில் இத்திட்டத்தை செயல்படுத்த முடியாது என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

சமூக நீதி அடிப்படையில் மாநிலத்தில் உள்ள கைவினைக்கலைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் விரிவான திட்டம் ஒன்று தமிழக அரசு சார்பில் உருவாக்கப்படும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படுவதற்கு காவல்துறையினருக்கு முழு சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

உளுந்தூர்பேட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் குற்றச்சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக குற்றம் சாட்டினார்.

சென்னையில் மழைநீர் வடிகால் பணிகளை திமுக அரசு முழுமையாக நிறைவேற்றவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

சென்னையில் மழைநீர் பாதிப்புகளை தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் திரு எடப்பாடி பழனிசாமி குறை கூறினார்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

செங்கல்பட்டு மாவட்டம் பையனூர் அருகே கார் மோதியதில் ஐந்து பெண்கள் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாய் நிதியுதவியை மாநில அரசு அறிவித்துள்ளது

-----------

பெரம்பலூர் மாவட்டம் செஞ்சேரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஊரக காவல் நிலையத்தை காவல்துறை கண்காணிப்பாளர் திரு ஆதர்ஷ் பசேரா இன்று திறந்துவைத்தார்.

------------

விருதுநகர் மாவட்டத்தில் காவலர் சீருடை பணியாளர் தேர்வில் தேர்ச்சி பெற்ற 88 பேருக்கு காவல்துறை கண்காணிப்பாளர் திரு கண்ணன் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

--------------

சேலத்தில் புத்தக திருவிழா வரும் 29-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 9-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி பிருந்தா தேவி கூறியுள்ளார்.

---------------

மதுரை மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக மல்லிகை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

உலக பாரா **Taekwondo Poomsae** சாம்பியன் போட்டியில் இந்தியா மூன்று தங்கம், இரண்டு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

பக்ரைனில் நடைபெற்ற இப்போட்டியில் கௌதம் யாதவ், மகேஷ் அங்காடி, கிரிஷ்மா ராவத் தங்கப்பதக்கம் வென்றனர்.

ராஜ்குமார் ராஜேந்திரன் மற்றும் **Nekat Kaur** வெள்ளிப்பதக்கத்தையும், **Bishnoi Jeetin Kumar,** ஆனந்தி மற்றும் பிங்கி வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

------------

உலக இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sydrela Das** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஸ்வீடனில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 11-9, 4-11, 5-11, 7-11, 11-5, 11-7, 14-12 என்ற செட் கணக்கில் பிரான்சின் **Nina Guo Zheng** –ஐ வென்றார்.

-----------

சையது மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

லக்னோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-17, 21-15 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Anmol Kharb**-ஐ வென்றார்.

இதர மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டங்களில் **Devika Sihag, Ira Sharma, Unnati Hooda, Tasnim Mir** ஆகியோரும் வெற்றிபெற்று, காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் பிரிவில் **Ayush Shetty** மற்றும் **Kiran George,** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<END>>>>>**